00005

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள்சார் கல்வியில் பட்டமேல் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025

மட்டம் - 08

இறுதிப் பரீட்சை – 2024/2025

**SNP8244/SNP8334–** விசேட நிலைமைகளுக்கான மற்றும் கற்றல் தேவைகளுக்கான அறிமுகம்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

திகதி:- 25.07.2025 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

---

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி –I

1. "விசேட கல்வித் தேவைகள்" என்ற எண்ணக்கருலை வரையறுத்து, விசேட தேவைகள் சார் கல்வியின் **மூன்று** (03) நோக்கங்களைக் குறிப்பிடுக.

2. ஒரு குழந்தைக்கு பார்வைக் குறைபாடு இருப்பதைக் குறிக்கும் **ஐந்து** (05) பொதுவான அறிகுறிகள் அல்லது வெளிப்பாடுகளைப் பட்டியலிடுக.

3. உடல்சார் குறைபாடுகள் உள்ள ஒரு குழந்தைக்குத் திறம்பட உதவ ஆசிரியர் செயற்படுத்தக்கூடிய **ஐந்து** (05) வகுப்பறை மாற்றியமைத்தல்களை விபரிக்குக.

4. பேச்சுசார் ஒழுங்கீனம் மற்றும் மொழிசார் ஒழுங்கீனம் ஆகியனவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக.

5. "புலன்சார் நரம்பியல் கேட்டல் இழப்பு" என்ற பதத்தை விளக்குக.

6. நடத்தைசார் ஒழுங்கீனத்தின் **மூன்று** (03) முக்கிய குறிகாட்டிகளைப் பட்டியலிடுக.

7. டவுன் சின்றோம் (Down Syndrome) உள்ள பிள்ளைகளால் வெளிப்படுத்தப்படும் சிறப்பியல்புப் பண்புகள் யாவை?

8. வரைதல் சார் (Dysgraphia) இயலாமையின் முக்கிய பண்புகளை பட்டியலிடுக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. **i.** "அறிவுசார் இயலாமை" என்ற எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துக.

(04 புள்ளிகள்)

**ii.** அறிவுசார் இயலாமையுள்ள மாணவர்கள் வகுப்பறையில் எதிர்கொள்ளும் **மூன்று** (03) சவால்களை விபரிக்குக.

(06 புள்ளிகள்)

**iii.** கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் அறிவுசார் இயலாமையுள்ள மாணவர்களுக்கு உதவியளிக்க ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய புதுமையான மற்றும் பயனுள்ள உத்திகளை முன்மொழிக.

(10 புள்ளிகள்)

10. **i.** ஒட்டிசத் திருசிய ஒழுங்கீனம் (ASD) என்பதைச் சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்துக.

(03 புள்ளிகள்)

**ii.** ஒட்டிசத் திருசிய ஒழுங்கீனம் உள்ள நபர்களிடம் பொதுவாகக் காணப்படும் முக்கிய பண்புகள் மற்றும் நடத்தைகளை அடையாளப்படுத்துக.

(07 புள்ளிகள்)

**iii.** ஒட்டிசத் திருசிய ஒழுங்கீனம் பற்றி பொதுமக்கள் கொண்டிருக்கக்கூடிய **மூன்று** (03) பொதுவான தவறான கருத்துக்களை பட்டியலிட்டு ஒட்டிசத் திருசிய ஒழுங்கீனம் உள்ள நபர்களை சமூகம் மேலும் உள்ளடக்கியதாகவும் அவர்களுக்கு ஆதரவாகவும் மாறக்கூடிய **மூன்று** (03) வழிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

11. "மீத்திறனுள்ள மற்றும் ஆற்றல்மிகு மாணவர்கள் பெரும்பாலும் ஆதரவு இல்லாமல் சிறந்து விளங்குவார்கள் என்று கருதப்படுகிறது"

**i.** கல்விச் சூழலில் "மீத்திறன்" மற்றும் "ஆற்றல்மிகு" ஆகிய பதங்களை வரையறை செய்க.

(04 புள்ளிகள்)

**ii.** சாதாரண வகுப்பறை அமைப்பில் இந்த மாணவர்கள் எதிர்கொள்ளக்கூடிய **மூன்று** (03) குறிப்பிடத்தக்க சவால்களை விபரிக்குக.

(06 புள்ளிகள்)

**iii.** மீத்திறனுள்ள கற்பவர்களின் கல்வி மற்றும் மனவெழுச்சிசார் தேவைகளை வளர்க்கும் ஒரு ஆதரவான கற்றல் சூழலை நீங்கள் எவ்வாறு உருவாக்குவீர்கள் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

12. பின்வரும் விடயஆய்வைக் கற்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.

*சாம் ஒரு அறிவும் படைப்பாற்றலும் மிக்க மாணவர். அவர் அறிவியல் பரிசோதனைகளைச் செய்வதிலும் தனது கைகளால் பொருட்களை உருவாக்குவதிலும் மகிழ்ச்சியடைகிறார் இருப்பினும், அவர் கற்றலைக் கடினமாக எண்ணுகிறார், பெரும்பாலும் எழுத்துக்களைக் குழப்புகின்றார். எழுத்துப்பிழை மற்றும் எழுதுவதில் சிரமப்படுகிறார். சத்தமாக வாசிக்கச் சொல்லும்போது அவர் பதட்டமாக உணர்கிறார். சில சமயங்களில், கற்றலின் போது வாசிக்க வேண்டிய விடயங்களைத் தவிர்க்கிறார்.*

**i.** விடயஆய்வின் அடிப்படையில், சாமுக்கு இருக்கக்கூடிய நிலையைக் கண்டறிந்து, அதன் **இரண்டு** (02) முக்கிய பண்புகளைப் பட்டியலிடுக.

(04 புள்ளிகள்)

**ii.** இந்த நிலை ஒரு வழக்கமான வகுப்பறையில் சாமின் கற்றலை எவ்வாறு பாதிக்கலாம் என்பதை விளக்குக.

(06 புள்ளிகள்)

**iii.** சாம் போன்ற மாணவர்களுக்கு உதவியளிக்க **மூன்று** (03) வகுப்பறை உத்திகளை பரிந்துரைத்து விளக்கி, வாசிப்பு மற்றும் எழுதும் செயல்பாடுகளின் போது அவர்கள் தன்னம்பிக்கையுடனும் உள்ளடங்கியும் இருப்பதை ஒவ்வொன்றிற்கும் உதாரணங்களை வழங்கி உறுதிப்படுத்துக.

(10 புள்ளிகள்)

13. **i.** "கற்றலுக்கான தடைகள்" என்பதன் பொருள் யாது?

(03 புள்ளிகள்)

**ii.** உள்ளடங்கல் கல்வியைச் செயற்படுத்துவதில் சமூகக் கருத்துக்கள் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை விளக்குக.

(07 புள்ளிகள்)

**iii.** உங்கள் பாடசாலை ஒரு உள்ளடங்கல் கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்துகிறது என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். ஒரு ஆசிரியராக, பல்வகைத் தேவைகளைக் கொண்ட குழந்தைகளுக்கு ஆதரவான பாடசாலைச் சூழலை விருத்தியாக்குவதற்கு உள்ளடங்கல் கல்வி பற்றி சக ஆசிரியர்களிடையே விழிப்புணர்வை எவ்வாறு உருவாக்குவீர்கள் என்பதை விளக்குக. உங்கள் அணுகுமுறையை விளக்குவதற்கு நடைமுறை எடுத்துக்காட்டுக்களை முன்வைக்குக.

(10 புள்ளிகள்)

14. **i.** பாடசாலையில் ஒரு மாணவரின் பங்கேற்பைப் பாதிக்கக்கூடிய கால தாமதமான சுகாதார நிலைமைகள் (Chronic Health Conditions) **இரண்டினைக்** (02) குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

**ii.** தசைநார்ச் சிதைவு (Muscular dystrophy) ஒரு மாணவரின் அன்றாட செயல்பாடு மற்றும் பாடசாலை நடவடிக்கைகளில் ஈடுபாட்டை எவ்வாறு பாதிக்கலாம் என்பதை விளக்குக.

(06 புள்ளிகள்)

**iii.** ஒரு வகுப்பறை ஆசிரியராக, உடல்சார் குறைபாடுள்ள மாணவரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உங்கள் வகுப்பறையை எவ்வாறு ஒழுங்கமைத்து சுதந்திரம் மற்றும் உள்ளடங்கலை ஊக்குவிப்பீர்கள் என்பதை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

(20x3 = 60 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -